# இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி சம்மந்தப்பட்ட (சார்ந்த) கேள்விகள் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்**: 2000 ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவ சபைகளின் கூற்று என்னவென்றால், அவருடைய வாழ்வின் இறுதியில், நசரேயனாகிய இயேசு சிலுவை மரணத்தை அடைந்து, சகல மரியாதையோடு அடக்கம், பண்ணப்பட்டு அவர் மூன்றாம் நாளில், உயிரோடு எழுந்தார் என்பதே.

**டாக்டர் கிரேக் யு ஈவான்ஸ்:...**கிரேக் A ஈவான்ஸ்:...அதற்கான ஆதாரங்கள் உள்ளது, அதற்கான சாத்தியகூறுகள் உள்ளது, என்னை பொறுத்தவரை எல்லா காரியங்களும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது, இவை நிர்பந்தைக்கப்படுவது போல காணப்படுகிறது.

**அறிவிப்பாளர்**: ஆனால் சிலருடைய கருத்து இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்பதாகும், அவர் அங்கு சுயநினைவை இழந்து கல்லறையில் அவர் சரியானார் என்கின்றனர். சில நவீன கால ஞானிகளின் இயேசுவின் சரீரம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, குப்பையில் தூக்கி எரிப்பட்டது, காட்டு நாய்கள் அதை தின்றதாக கூறுகின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுதலின் தோற்றம் என்பது வெறும் ஒரு கட்டுக்கதை அல்லது பிரம்மை என்கின்றனர் அது உண்மையில், இயேசுவின் வெளிப்பாடு அல்ல என்கின்றனர்.

**டாக்டர் எட்வின் யமவ்ச்சி:...**சரி, ஒருவேளை உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், அதை பற்றி நாம் பேச வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் என்ற ஒன்று தோன்றியிருக்காது.

**டாக்டர் கேரி ஹேபெர்மேஸ்:..**நான் பத்து வருடங்கள் இறைநம்பிக்கையற்றவனாக இருந்தேன். எனக்கு, வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்ற கேள்வி இருந்தது. நான் யோசித்திருக்கிறேன், நான் அடக்கம்பன்னப்படும்போது, என் கல்லறையின் மேல் இலைகள் பறக்கும் அவ்வளவுதான. அல்லது ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? எண்ணெய் பொறுத்தவரை, நான் உயிர்த்தெழுதலை பற்றிய ஆராய்ச்சியில் தேறினவன். உங்களுக்கு தெரியுமா? இந்த ஆராய்ச்சியினால் என்ன நடக்கும் என்று நான் யோசித்த நாட்கள் உண்டு. ஆனால் இறுதியான முடிவு என்னவென்றால், அவை என்னை வெளியே கொண்டுவந்தது, நம்பிக்கையற்ற நிலையை மாற்றியது. என்னுடைய, கருத்து வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உள்ளதென்று எடுத்துரைப்பது உயிர்த்தெழுதல் தான். இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்ததினால் நமக்கு நித்தியத்தின் நிச்சயம் உண்டாகிறது.

**அறிவிப்பாளர்**: உலக மற்றும் கிறிஸ்தவ உபகரணங்களில் இருந்து வரலாற்று ஆதாரங்களின் சோதனைகள் மூலம் புலப்படும் காரியங்கள் என்ன?

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்:.**இயேசுவை இஎசுவாகவே இருக்க அனுமதிக்க வேண்டும். அவர் தம்மை குறித்து கூறிட இடமளித்து அவராகவே இருக்க வாய்ப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய இஷ்டப்படி வரலாற்றில்

இயேசுவை பற்றி சொல்லப்பட்டவைகளை உங்களுடைய கற்பனை படி மாற்றிக்கொள்வீர்கள். அப்போது நீங்கள் உங்களை போன்ற ஒரு சாதாரண நபராக இயேசுவை காண்பித்திடுவீர்கள்.

**அறிவிப்பாளர்**: இயேசு உண்மையாகவே மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நிருபிக்கும் ஆதாரங்கள் உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறீர்கள்?

**டாக்டர் டேரல் பாக்:**...இயேசு தம்மை குறித்து கூறியது உண்மையென்றால், நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள கடமை பட்டிருக்கிறோம், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது அசௌகரியமானதாக இருக்கும்.

**அறிவிப்பாளர்**: இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம் உலக தரம் வாய்ந்த வரலாற்று நிபுணர்கள், இறையியலாளர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்வதை கேளுங்கள்.

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நாம் இயேசுவின் வாழ்வை பற்றி பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் தன்னை தேவனுடைய குமாரனாக அடையாளப்படுத்திக்கொண்டாரா? இந்த உலகத்தின் பாவத்திற்காக சிலுவை மரணத்தை அடையப்போவதாக அவர் எப்போதாவது போதித்தாரா? அவரது மரணத்திற்கு பிறகு, அவர் உயிரோடுஎழுந்து சீஷர்களுக்கு தரிசனமானார் என்பதற்கு உண்மையான ஆதாரங்கள் இருக்கிறதா? மெய்யான உறுதியான முடிவை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு போதுமான வரலாற்று ஆதாரங்கள் காணப்படுகிறதா? பலதரப்பட்ட மேதைகள் இருக்கிறது என்கின்றனர். கடந்த சில வாரங்களாக இயேசுவின் வாழ்க்கையை குறித்து இன்றைய

வல்லுநர்கள் நம்பும் 12 மறுக்க முடியாத வரலாற்று உண்மைகளை பற்றி பார்த்து வருகிறோம், அந்த பட்டியலின் ஐந்தாவது உண்மை வியப்படையச் செய்கிறது. என்ன வென்றால்: சீஷர்களுக்கு உண்டான அனுபவங்கள் உயிர்த்தெழுந்த இயேசுதான் தங்களுக்கு தரிசனமானார் என்று உறுதியாக நம்பச்செய்தது. வரலாற்று நிபுணரான டாக்டர். கேரி ஹேபெர்மேசிடம் கேட்டேன், இந்த உண்மைக்கு ஆதாரம் என்ன? கேளுங்கள்.

**ஹேபெர்மேஸ்:.**வெல், இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்ற உண்மையை, ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு பெரும்பாலானோர் வந்துவிட்டனர், இதில் மறுக்க முடியாத உண்மை என்பது அதை கண்ணால் பார்த்த சாட்சிகள் தான், குறிப்பிட்ட சில சீஷர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள், தாங்கள் உயிர்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக முழு நிச்சயமாக நம்பினார்கள். இதை வேறு விதங்களில் சொல்ல வேண்டுமானால், உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக நிச்சயமாக கூறும் சில அனுபவங்களை அவர்கள் பெற்றிருந்தனர். அவர்கள் அப்படி சொல்வதால், நாம் அதை அறிந்திருக்கிறோம். உயிர்த்தெழுந்த பிறகு தெரிசனமானார் என்று நம்புவதற்கு இது மிக முக்கியமான சாட்சியாக கருதப்படுகிறது என்று நினைக்கிறேன்.

**அன்கெர்பெர்க்:** டாக்டர். பென் விதேரிங்டன் வரலாற்றில் இயேசு என்பதை பற்றி பிரசித்திபெற்ற பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவர் ஆஸ்பரி தியோலஜிகள் செமினரியில் புதிய ஏற்ப்பட்டு விரிவுரையாளராக இருக்கிறார். ஏன் வரலாற்று நிபுணர்கள் இயேசு தமது சீஷர்களுக்கு தரிசனமாகியிருப்பார் ஏன் நம்புகிறார்கள் என்றேன். அவர்கள் நம்புகிறார்கள், அவர்கள் அவரை தான் பார்த்தார்கள் என்பது அவர்களுக்கு எப்படி தெரியும்?

**டாக்டர் பென் விதெரிங்க்டன்இ:** சரி, சீஷர்களுடைய உளவியலின் நிலையை பார்க்கும்போது, அவர்கள் இயேசுவை மறுதலித்தனர் அவரை காட்டிகொடுத்தனர் அவரை நிராகரித்தனர் என்ற உண்மையை நாம் நம்புகிறோம், அவர் சிலுவையில் அறையப்படுப்போது அவர்கள் முற்றிலுமாக அவரை இழந்துவிடுகின்றனர், ரீதியாகா, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு அவர்களுடைய மனதை பாதிக்க கூடிய ஏதோவொரு காரியம் நிச்சயம் அவர்களுக்கு நடந்திருக்க வேண்டும். ஏனென்றால், உண்மையில், ஆதிகால யூதர்கள் யாரும் சிலுவையில் அறையப்படும் மேசியாவை எதிர்பார்க்கவில்லை. இயேசுதான் மேசியா என்ற வதந்தியை தடைகல்லாக நிறுத்தி, சிலுவையில் அறையப்பட்டதால், அவர் சபிக்கப்பட்டவர் எனபது நிரூபணமாயிற்று, தேவனால் ஆசீர்வதிக்கப்படவில்லை, இவர் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவறல்ல. அதனால இப்ப அவங்க, முழுவதுமாக சிதறடிக்கப்பட்டனர், அவர்களுடைய வாழ்க்கையே தலை கீழாக மாறினது, அவர்கள் கடந்த வருடத்தில், 2 வருடங்கள், தங்கள் வாழ்வின் 3 வருடங்களாக அவரோடு இருந்தனர், வேறு ஒன்றும் செய்யாமல், இயேசுவையே பின்தொடர்ந்தனர். அந்த எண்ணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவது எது? அவர்களுக்கு சுற்றிலும் இருக்கும் ஏதோவொன்று அவர்களுக்குள் ஆணித்தரமான ஒரு தாக்கத்தை உண்டாக்க வேண்டும், இயேசு மரித்துவிட்டார் எல்லாம் முடிந்துவிட்டது என்ற அவர்களுடைய கருத்தை மாற்றும் விதமாக ஏதாவது நடக்க வேண்டும். மறுக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது நடக்கணும். மார்டின் டிபிலியஸ், ஜெர்மானிய மேதை ஒருமுறை கூறியிருந்தார் இயேசுவின் மரணத்திற்கும் ஆதி திருச்சபையின்

பிறப்பிற்கும் இருக்கும் தொடர்பை விளக்கிட பொருத்தமான நிலையை உறுதிசெய்திடவேண்டும். அப்படி பொருத்தமான நிகழ்வுகளை முன்வைக்காமல், வரலாற்று தொடர்புகளை விளக்கி கூற முடியாது.

**அன்கெர்பெர்க்:** அடுத்தது, உலக எழுத்தாளர்கள் அல்லது கிறிஸ்தவ எழுத்தாளர்கள் யாராவது இயேசுவின் சீஷர்கள் அவர்தான் தமக்கு தரிசனமானார் என்பதை ஏற்றுக்கொண்டு அஹி குறித்து சொல்லியிருக்கிறார்களா? அதற்கான விடை, “ஆமாம்”. டாக்டர். கரி ஹேபெர்மேஸ் விளக்குகிறார்.

**ஹேபெர்மேஸ்:**.பிலேமோன் நிருபத்தில் பார்க்கும்போது அவர் சிலுவை மரணஹ்த்தின்போது பூமியெங்கும் இருள் சூழ்ந்தது என்று சொல்வதோடு, இயேசு அதற்கு பிறகு தமது சீஷர்களுக்கு காட்சியளித்து தனது காயங்களையும் சரீரத்தையும் கான்பித்தத்தாக கூறுகிறார். அவரை அவர்கள் தொட்டார்களா என்று சொள்ளப்படவில்லை, ஆனால் அவருடைய  உயிர்த்தெழுதலுக்கு பிறகு தமது சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார்.

ஜோசெபஸ், அதிக சர்ச்சைக்குரிய பகுதி கூறுகிறது இயேசு 3 நாளைக்கு பிறகு தம்மை வெளிப்படுத்தினார். அநேக வல்லுநர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் இந்த பகுதியானது மூல பாஷையில் சொல்லப்பட்டபடி, “3 நாளைக்கு பிறகு அவர் தரிசனமாவார் என்று சீஷர்கள் போதிக்கப்பட்டிருந்தனர்,” என்பதை அத்தனை வல்லுனர்களும் மேதைகளும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது உண்மை, அதைதான் நாமும் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

உயிர்த்தெழுதலை ஒப்புக்கொள்ளும் சில நாத்திகவாதிகளின் ஆதாரங்களும் இருக்கிறது.  சத்தியத்தின் சுவிசேஷத்தை குறித்து

நினைவிருக்கிறது, முதன்முதலில் வெளிவந்த ஒன்று. உயிர்த்தெழுதலை குறித்த ஆய்வுகட்டுரையிலும் இதுதான் சொல்லப்பட்டிருக்கிறது, தோமாவின் சுவிசேஷத்திலும் இதுதான் சொல்லப்பட்டிருக்கிறது, தோமாவின் சுவிசேஷம் அதிக சர்ச்சையை உண்டாக்கியது. சிலருடைய கருத்து என்னன்னா, உயிர்த்தெழுதலை பற்றி தோமாவின் நிருபத்தில் எந்த குறிப்பும் இல்லை. ஆனால் தோமாவின் சுவிசேஷத்தின் ஆரம்பத்தை பார்க்கும்போது, உயிர்த்தெழுந்தவர் உரைக்கிறார், ஜீவனோடிருப்பவர் தான் பேசுகிறார், அதனால் தோமாவில் உயிர்த்தெழுந்த இயேசு என்ற கண்ணோட்டம் தான் அதிகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2 வரலாற்று வல்லுநர்கள் உள்ளனர் டாசிடஸ் மற்றும் சூடோனியஸ், இருவரும் கனம்பெற்ற ரோம வரலாற்று நிபுணர்கள் உயிர்த்தெழுதலை பற்றி போதிப்பதில்லை, ஆனால் அவர்களுடைய கருத்து, வேடிக்கையாகனது, இந்த நபர் மரித்த பிறகு, இந்த குறும்புத்தனமான மூடநம்பிக்கை புதிதாக தோன்றியதாம். அப்படின்னா மேடிடேரேனியன் மாகாணம் முழுதும் பரவிய இந்த குறும்புத்தனமான மூடநம்பிக்கைக்கு அடித்தளம் என்ன?

இந்த 2 வரலாற்று வல்லுநர்கள் அளிக்கும் 2 காரியங்கள் இருக்கு, அதையேதான் பிலேமோன் மற்றும் ஜோசெபஸ் இருவரும் கூறியிருக்கின்றனர். சில நாத்திகவாதிகளின் ஆதாரங்களும் இருக்கிறது. புதிய ஏற்ப்பாட்டில் இல்லாத ஆதாரங்களுக்கு இதுவே போதுமானதாக இருக்கும்.

**அன்கெர்பெர்க்:** சரி, இயேசு தனது மரணத்திற்கு பிறகு பலதரப்பட்ட மனிதர்களுக்கு தரிசனமானார் என்பதற்கு கிறிஸ்தவ எழுத்தாளர்கள் குறிப்பிடும் ஆதாரங்கள் என்ன? சித்தாந்தமேதை டாக்டர். வில்லியம்

லேன் கிரேக் வரலாற்று தகவலை முன்பாக வைக்கிறார் கொரிந்து சபைக்கு பவுல் எழுதிய நிருபத்தில் சொல்லப்பட்டதை இன்றைய பெரும்பாலான விமர்சகர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் அதாவது உயிர்த்தெழுந்த இயேசு சீஷர்களுக்கும், மற்றவர்களுக்கும், தனிநபர்களுக்கும், அவர்தாமே, தரிசனமானார் என்பதை முற்றிலும் உண்மை. கேளுங்கள்.

**கிரேக்:.**அதாவது புதிய ஏற்பாட்டு நிபுணர்கள் அனைவரும் இயேசு மரணத்திற்கு பிறகு தரிசனமானார் என்ற கலாச்சார பின்னணியை புரிந்துகொள்ள உதவியாக இருந்தது காலம் சென்ற ஜெர்மானிய புதிய ஏற்பாட்டு வல்லுனரான ஜோயாக்கீம் ஜெரேமையாஸ் அவர் 1 கொரிந்தியர் 15ல் பவுல் கூறியிருப்பது அவருடைய சொந்த வார்த்தைகள் அல்ல ஆனால் ஆதி கிறிஸ்தவ பாரம்பரியத்தில் சொல்லப்பட்ட காரியத்தை அவர் பெற்றுக்கொண்டு அதை தமக்கு பின்வருபவர்களுக்கு கூறுவதாக சொல்கிறார். இந்த பரிசுத்தமான பாரம்பரியத்தை பெற்றுக்கொண்டு அதை மற்றவர்களுக்கு கூறுவதற்கு அவர் போதனை வடிவிலான செயல்பாடு என்று கூறுகிறார். பவுல் கொரிந்தியர்களுக்கு சொல்லும்போது: “நான் அடைந்ததும் பிரதானமாய் உங்களுக்கு ஒப்புவித்ததும் என்னவென்றால்,” இப்ப பழைய விஷயத்தை சொல்கிறார், பவுல் கண்டிறாத காரியங்கள்: “கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின் படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐநூறுபேருக்கும் அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார், அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சில மாத்திரம்

நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும் அதன்பின்பு அப்போஸ்தலர் எல்லாருக்கும் தரிசனமானார், எல்லாருக்கும் பின்பு," பவுல் கூறிகிறார், "அகாலப்பிறவி போன்ற எனக்கும் அவர் தரிசனமானார்." (1 கொரி. 15:3-8)

இவை அனைத்தும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு ஐந்தாண்டுகளுக்குள் நடந்தது. இதன்படியாக, ஆதிகால கிறிஸ்தவர்களின் சரித்திரத்தில் நசரேயனாகிய இயேசுவை அவருடைய மரணத்திற்கு பிறகு நேரடியாக பார்த்த சாட்சிகளாக தனிநபர்களும் ஒரு குழுவான மக்களும் இருந்ததை உறுதிபடுத்தும் வித்தமாக ஆதி திருச்சபையின் பதிப்புகள் எடுத்துரைக்கிறது. சரி, நமக்கு விருப்பமிருந்தால் இவையனைத்தையும் ஒரு கற்பனை பிரம்மை என்று சொல்லலாம், ஆனால் இவை நடந்த சம்பவங்கள் என்பதை நம்மால் மறுக்கவே முடியாது. அதனால் தான், உதாரணமாக, பவுலா பிரெட்ரிக்சன், ABC ஸ்பெஷலில், கூறுகிறார், "வரலாற்று நிபுணராக, இந்த மனிதர்கள் ஏதோவொன்றை கண்டிருந்ததையும் தாங்கள் கண்டதாக அவர்கள் நம்பின அந்த காரியம் அவர்கள் வாழ்வை மாற்றியது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்."

எனவே இந்த ஒரு காரணத்தால், உறுதியாக, புதிய ஏற்பாட்டு வல்லுநர்கள் ஒருமித்து ஏற்றுக்கொள்கிறார்கள் ஆதி சீஷர்கள், மக்கள், மற்றும் தனிநபர் என அனைவரும் இயேசுவின் மரணத்திற்கு பிறகு அவருடைய உயிர்த்தெழுந்த தோற்றத்தை தரிசித்த அனுபவத்தை பெற்றிருக்கின்றனர்.

**அன்கெர்பெர்க்:** சரி, உங்களிடம் ஒரு கேள்வியை முன்வைக்கிறேன்: இயேசு உயிர்த்தெழுந்த பிறகு எத்தனை பேருக்கு தரிசனமாகியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்? ஒரு சில

தனிநபர்களுக்கு மட்டுமா? சில விசுவாசிகளுக்கு மட்டுமா? கிடையாது. வரலாற்று அறிஞர் டாக்டர். கரி ஹேபெர்மேஸ் அளித்திடும் ஆதாரங்கள் உங்களை வியப்படைய செய்திடும்.

**ஹேபெர்மேஸ்:**.ஆமா, நிச்சயமா, இதற்கு ஆதாரமான பகுதி 1 கொரிந்தியர் 15. அந்த பட்டியலில் தனிநபர்கள் உள்ளனர், சபையின் தலைவர்கள் உள்ளனர். பவுல் பேதுருவிளிருந்து துவங்கி தன்னிடத்தில் முடிக்கிறார், இதற்கிடையில் யாக்கோபு இருக்கிறார், இயேசுவின் சகோதரன். 3 முக்கிய நபர்கள் உயிர்த்த இயேசுவை கண்டிருகிரார்கள். ஆனால் கூட்டமான சில மக்களும் இருக்கிறார்கள் அவர் தரிசனமானார் என்பதற்கு இவர்களும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறார்கள். 12 பேரும் இருக்காங்க, அப்பறம் ஒரு குழுவினர், "அப்போஸ்தலர்கள் எல்லாரும்," அப்பறம் ஐநூறுபேருக்கும் அதிகமான சகோதரர், அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்.

சரி, சுவிசேஷங்களை பார்க்கும்போது அங்கும் சில திடமான ஆதாரங்கள் இருக்கிறதென நினைக்கிறேன், உதாரணமாக அந்த பெண்கள். கல்லறை கிட்ட நிறைய பெண்கள் இருந்தாங்க ஆனா திரும்பி வரும்போது  மகதலேனா மரியாள் மட்டும்தா தனியா வர்றாங்க. எனவே அவங்க இயேசுவையும் பார்த்தாங்க காலியாக இருந்த கல்லறையையும் பார்த்தாங்க, இன்னும், சிறந்த விதத்துல முன்னேறி போகனுண்ணா, நீங்க பெண்களோட வார்த்தைகள உபயோகிக்க மாடீங்க ஏன்னா அவங்க சாட்சி சட்டத்துல செல்லாது. முதல் நூற்றாண்டின் பாலஸ்தீனியர்களை நீங்க கவர போறது கிடையாது. இருந்தாலும் சில காரனங்களால பெண்களுடைய சாட்சியமும் இரண்டாவதாக மரியாளின் சாட்சியமும் செல்லும் ஏன்னா" உயிர்த்த இயேசுவை அவங்க பார்த்திருக்காங்க.

சரி, சுவிசேஷங்களில் எம்மாவூருக்கு போகும் வழியில் 2 பேரோடு பேசிக்கொண்டே போனார் என்று சொல்லப்படுகிறது. அதாவது, பல மைல்கள் இந்த புதிய நபரோடு பேசிக்கொண்டே நடந்துபோய்க்கொண்டிருக்கையில் அவர் இயேசு என்பது புரிந்தது.

சீஷர்களின் கூட்டம் என்ற ஒரு கூட்டத்தையும் இங்கு பார்க்கிறோம். யோவான் 20ல் ஒரு சிலரை தவிர மற்ற எல்லா சீஷர்களும் இருந்தாங்க, அது யாருனா, யூதாசும் தோமாவும் தான். ஒரு வாரத்திற்கு பிறகு 2 வது முறை தரிசனமாகும் போது தோமாவும் இருக்கிறார் தோமா அடையாளத்தை கேட்கும் பிரபலமான சம்பவம் அப்போதுதான் நடக்கிறது. அடுத்த அதிகாரத்தில், யோவான் சீஷர்கள் கடற்கரையில் மீன் பிடித்துக்கொண்டிருப்பதை பற்றி கூறுகையில், இங்கும், இயேசு அவர்களுக்காக உணவை ஆயத்தம்பண்ணுகிறார் அவர் அவர்களுக்காக உணவு தயார்படுத்துவதை அவர்கள் கண்டதாக சொல்கிறார். அதுமட்டும் இல்லாம, பேதுரு, எப்பவும்போல உணர்ச்சிவசத்தோட, மீன்களோட படகுல வரவங்கள முந்திப்போய் இயேசுவிடம் பேசும்படியாக தண்ணீல குதித்து நீந்தி செல்கிறார். அதனால இங்க பலவிதமான காரியங்கள் நடக்கிறது. இதில் ஆண்கள் இருக்கிறார்கள் பெண்களும் பங்கு வகிக்கிறார்கள். தனிநபர்களின் இடைபாடுகளும் குழுவான மக்களின் பங்கும் உண்டு. வீட்டிற்குள்ளும் வெளியிலும், உட்கார்ந்திருக்கையில், நடக்கையில், மீன்பிடிக்கையில், உணவு தயாரிப்பது என்று இருக்கிறது, அவர்களோடு நடந்தார், பாதங்களை பற்றிக்கொண்டார்கள், நிறைய விஷயங்கள்.

நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பது ஜான் அன்கேர்பேர்க் நிகழ்ச்சி, முன்னிலையில் இருக்கும் வரலாற்று நிபுணர்கள், இறையியலாளர்கள் மற்றும் அகழ்வாராய்ச்சியாளர்கள், அனைவரும் இயேசுகிறிஸ்து

மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களை உங்கள் முன்பாக எடுத்துரைக்கின்றனர்.

**N.வு. ரைட்:** ஆகவே, வரலாற்று நிபுணர், என்பவர் ஒருவேளை வேற்று மனிதனாகவோ, இஸ்லாமியர், கிறிஸ்தவராகவோ இருக்கலாம் - அவர்களுடைய வேலை என்னவென்றால், “இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தும் எப்படி இயேசுதான் மேசியா என்ற செய்தி காட்டுத்தீப்போல் பரவிற்று என்பதை விளக்க வேண்டும்.” அதற்கான ஒரே பதில், “அப்படி நடப்பதற்கு ஒரே காரணம் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார்.”

**விதெரிங்க்டன்இ:** சரி, சீஷர்களுடைய உளவியலின் நிலையை பார்க்கும்போது, அவர்கள் இயேசுவை மறுதலித்தனர் அவரை காட்டிகொடுத்தனர் அவரை நிராகரித்தனர் என்ற உண்மையை நாம் நம்புகிறோம், அவர் சிலுவையில் அறையப்படுப்போது அவர்கள் முற்றிலுமாக அவரை இழந்துவிடுகின்றனர், ரீதியாகா, இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு அவர்களுடைய மனதை பாதிக்க கூடிய ஏதோவொரு காரியம் நிச்சயம் அவர்களுக்கு நடந்திருக்க வேண்டும்.

**ஹேபெர்மேஸ்:**.சரி ஒரு நிமிஷம், உங்களுடைய கருத்திற்கே வருகிறேன். இதனுடைய முடிவை நீங்க நம்பாமல் இருக்கலாம். இதில் விடுபட்டிருப்பது என்ன, உண்மையா என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? பொதுவாக இந்த கட்டத்தில் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி இந்த விவாதத்திலிருந்து வெளியேறிட முயல்வார்கள். ஆனால் அவர்கள் இயற்கை கொள்கையை முன்வைத்தால், என்னுடைய கருத்துப்படி, நன்கு அறியப்படும் வரலாற்று உண்மைகள், வலுனர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

அனைத்தும் இந்த இயற்கையின் கொள்கையை தவறானது என்று நிரூபிக்க போதுமானதாக இருந்திடும், அதோடு உயிர்த்தெழுதலுக்கான சிறந்த ஆதாரங்களை பெற்றிடுவோம்.

**அன்கெர்பெர்க்:** இயேசுவின் சரித்திரத்தை எழுதியவர்களில் உலக பிரசித்திபெற்ற பதிப்பிற்குரிய வரலாற்று வல்லுனரானர் Dr. N.T. ரைட், கேனன் தியாலஜியன் ஆப் வெஸ்ட்மின்ஸ்டர் ஆபெய். 22 ஆண்டுகள் அவர் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் பணியாற்றினார்.
உயிர்த்தெழுந்த இயேசுதான் தங்களுக்கு தரிசனமானார் என்று சீஷர்கள் நம்பினத்தை அவரும் மற்று வல்லுனர்களும் ஒப்புக்கொள்ள என்ன காரணம் என்று கேட்டேன்.

இயேசுவின் வாழ்விற்கு பிறகு உண்டான கிறிஸ்தவ சபையை எப்படி விளக்கிடுவீர்கள்?

**ரைட்:** சரி, இது மிகவும் சுவாரஸ்யமான கேள்வி, ஏனென்றால் உலக வரலாற்றிலேயே கிறிஸ்தவத்தின் துவக்கம் என்பது அசாதாரமான நிகழ்வாக கருதப்படுகிறது. கி பி 20ல் கிறிஸ்தவ சபை என்று எதுவும் இருக்கவில்லை. கி பி 120ல், இந்த கிறிஸ்தவர்களை வைத்து என்ன செய்வது என்று கேள்வியை அனுப்பிய தனது வடதுருக்கி மாநில ஆட்சியரின் கடிதத்தை கண்ட ரோமில் இருந்த பேரரசர் சோர்வடைந்திருந்தார். அந்த நூற்றாண்டில் தான், எங்கிருந்தோ வந்த இந்த மார்க்கம் அசாதாரணமான வித்தத்தில் தலையெடுத்தது. நம்மிடம் ஆதாரம் இருக்கும் அந்த காலத்து ஆதிகால கிறிஸ்தவர்கள் கூறினார்கள், “ஏன் இப்படி நடந்ததென்று உங்களுக்கு சொல்கிறோம். நசரேயனாகிய இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்ற உண்மையினாலே இப்படி ஆயிற்று என்றார்கள்.”

**அன்கெர்பெர்க்:** விமர்சகர்களான மேதைகளும் உயிர்த்தெழுந்த இயேசுவை சீஷர்கள் தரிசித்தனர் என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறார்கள், ஆனால் அவர்கள் கேள்வி, எதற்காக சீஷர்கள் அவரை பார்த்தார்கள்? இயேசு அவர்களுக்கு முன்பாக தனது மாம்ச சரீரத்தோடு நின்றாரா, அல்லது அவர்கள் சொப்பனம் பார்த்தார்களா அல்லது இயேசு என்ற பிரம்மை உண்டானதா? Dr. பென் விதேரிங்டன் நமக்கு சொல்கிறார்.

**விதெரிங்க்டன்இ:** சீஷர்கள் இயேசுவை கண்டதாக நம்பினார்கள் என்று பலதரப்பட்ட நிபுணர்கள் சொல்லுகிறார்கள், அவர்களில் அநேகர் இதோடு முடித்துக்கொள்ளலாம் என நினைத்து அப்படி சொல்லுகிறார்கள், இது ஆராய்ந்து அறியத்தக்கதான சம்பவமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் உயிர்த்தெழுந்த இயேசுவின் உயிர்த்தெழுந்த தோற்றத்தையும் பவுலின் ஆதாரங்களையும் ஒப்பிட்டு பார்ப்பதோடு, புதிய ஏற்ப்பாட்டின் மற்ற ஆதாரங்களயும் ஒப்பிட்டால், அவை நாம் புரிந்துகொள்வதற்கும் மேலானவற்றை கூறுகிறது. இயேசுவின் மரணத்திற்கு பிறகு மாம்ச சரீரத்தில் தான் அவரை பார்த்தார்கள் என்பதை தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களோடு சாப்பிடுகிறார், தத்ரூபமாக தோன்றினார், அவரை தொட முடியும், ஒரு உண்மையான நபரை போல அவர் இந்த பூமியில் நடமாடிக்கொண்டிருந்தார். அவர்கள் இயேசுவை தரிசித்தனர் என்று சொல்வதற்கும் மேலான சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

**அன்கெர்பெர்க்:** பொதுவாக, நீங்க எடுத்துக்கூறும் இந்த ஆதாரங்களையும் இந்த நான்கு ஐந்து ஆதாரங்களை நிருபிக்கும்

சாத்தியங்களையும் நிராகரிக்கும் மக்களிடம் நீங்கள் சொல்லுங்கள், “சரி, இது உயிர்த்தெழுதல் இல்லை, ஆனா, அங்க, ஏதோவொன்று நடந்திருக்கிறது.”

**ஹேபெர்மேஸ்:**.சரி, இதை எந்த விதத்தில் எடுத்து சொல்கிறோம் என்பதுதான் முக்கியம் என்று நினைக்கிறேன். எல்லா மேதைகளும் ஒப்புக்கொள்ளும் உண்மைகளை ஆரம்பத்திலிருந்து பார்த்து வருகிறோம். உங்ககிட்ட அந்த பட்டியல் இருக்கு. நாம் தன்னிச்சையாக அந்த பட்டியலை குறைத்திருக்கிறோம், “அதாவது, எனக்கு இத்தனை குறிப்புகள் தேவையில்லை. எனக்கு போதுமான குறிப்புகளை சொல்லீடீங்க.”

இப்ப, விமர்சகர்கள் மத்தியில் நீங்க இதைப்பற்றி சொல்லும்போது, நீங்க என்ன சொல்ல வேண்டும் என்று தெரியுமா: இதை விட அதிகமான காரியங்கள் புதிய ஏற்ப்பாடு முன்வைக்கிறது என எனக்கு தெரியும் , ஆனா புதிய ஏற்ப்பாடு முழுவதையும் நான் கேட்கல. உங்களுடைய புத்தகத்தில் நீங்கள் திரும்பத்திரும்ப சொல்லியிருக்கும் இந்த பட்டியலை பற்றிதான் கேட்கிறேன் என்பார்கள். இதை பற்றி விளக்கமளிக்காம நீங்க திசை மாறி, இன்னும், பல அருமையான விஷயங்கள் நடந்திருக்கு அதைப்பற்றி எனக்கு தெரியாதென்று சொல்லமுடியாது. இல்ல. ஒரு நிமிடம், நமக்கு தெரியாத விஷயத்தை பற்றி யோசிக்க வேண்டாம், நமக்கு தெரியாது என்று அவர்களும் நினைக்கிறார்கள், நமக்கு தெரிந்ததை நாம பேசிடலாமே ஏன்னா நமக்கு தெரியும், குறிப்பாக இந்த 5 உண்மைகள், மொத்தமாக 12 உண்மைகள், இயற்கையின் கொள்கையாளர்களின் கருத்தை தகர்க்க நமக்கு தெரிந்த இந்த உண்மைகளே போதுமானவைகள். அதனால, நாம ஒளிந்துகொள்ள அவசியமில்லை, “சரி, ஒத்துகிறேன், என்னமோ

நடந்திருக்கு.” இல்ல, இல்ல. ஆதியிலிருந்த சாட்சிகள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக விசுவாசித்தார்கள் என்பதற்கு போதுமான ஆதாரம் கொடுத்திருக்கிறீர்கள். அவர்கள் உண்மையாய் அவரை பார்க்கவில்லை என்ற பதில் தவறாக இருந்தால் மாற்று கருத்து தெரிவிக்கவேண்டியிருக்கும். ஆனால் வியப்படைய செய்யும் காரியம் எந்த மேதைகளும் அந்த திசையில் பயணிப்பதில்லை, அவர்களுடைய புத்தகங்களிலும் சரி, பேச்சிலும் சரி, அந்த வழியை அவர்கள் தெரிந்தெடுப்பதில்லை. அவர்கள் மாட்டிக்கொண்டது போல உணருகிறார்கள்: “நா இந்த கொள்கைய சொன்னா அதற்கும் உங்களிடம் பதில் இருக்குமே என்கின்றனர்.”

சரி ஒரு நிமிஷம், உங்களுடைய கருத்திற்கே வருகிறேன். இதனுடைய முடிவை நீங்க நம்பவில்லை என்றால், இதில் விடுபட்டிருப்பது என்ன? உண்மையா என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? பொதுவாக இந்த கட்டத்தில் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி இந்த விவாதத்திலிருந்து தப்பித்திடுவார்கள். ஆனால் அவர்கள் இயற்கை கொள்கையை முன்வைத்தால், என்னுடைய கருத்துப்படி, நன்கு அறியப்படும் வரலாற்று உண்மைகள், வலுனர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்தும் இந்த இயற்கையின் கொள்கையை தவறானது என்று நிரூபிக்க போதுமானதாக இருந்திடும், அதோடு உயிர்த்தெழுதலுக்கான சிறந்த ஆதாரங்களை பெற்றிடுவோம்.

**அன்கெர்பெர்க்:** உங்களை கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள் இப்போது இதை மனதில் ஏற்ப்படும் கேள்வி இதுதான், நடந்தது இதுதானா , ஆல்ரைட், ஒப்புகொள்கிறேன்.” அடுத்து என்ன செய்யவேண்டும்?

**கிரேக்:**.அடுத்த படி என்னவென்றால் நசரேயனாகிய இயேசுவிடம் தான் நித்தியா ஜீவனுக்கான திறவுகோல் இருக்கிறது என்பதை உணர்வது என்று நினைக்கிறேன். இயேசு சொல்கிறார், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருக்கிறேன். என்னில் விசுவாசமாயிருக்கிறவன் மரிப்பதில்லை, அப்படி அவன் மரித்தாலும், பிழைப்பான். (யோவான் 11:25-26) மரணம், அதாவது, இதுதான் மனிதனுடைய மிகப்பெரிய எதிரியென நினைக்கிறன் ஏன்னா மனித வாழ்க்கையை ஒரு கேள்விக்குறியோடு நிறுத்துவது இதுதான். நான் மரிக்கும்படியாக தான் வாழ்கிறேன் என்றால் அந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் நோக்கம் உண்டாயிருக்கிறது, முழு மனுக்குலமும் சாகும்படியாகதான் வாழ்கின்றதா? கல்லறை நம்முடைய முடிவல்ல என்பதை இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு கூறுகிறது. நம்முடைய முடிவு  இயேசு கிறிஸ்து வாக்களித்தபடி அவரில் விசுவாசமாஇருப்பவர்களுக்கு அளிக்கப்படும் நித்திய ஜீவனும் தேவனோடுள்ள ஐக்கியமுமாயிருகிறது.

என்னுடைய கருத்துப்படி இயேசுவின் உயிர்த்தெழுதல், நடந்திருந்தால், நிச்சயம் அது மனுக்குலத்திற்கு ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கையளிக்கும் காரியமாக தான் பார்க்கிறேன் ஏனென்றால் அதுதான் நமது பூலோக வாழ்விற்கு அர்த்தமாகவும்  இதற்கு பிறகு இருக்கும் வாழ்வின் திறவுகோலாகவும் இருக்கிறது.

**அன்கெர்பெர்க்:** சரி, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு சபையின் அங்கத்திரனராகி கிறிஸ்தவராக இல்லாமல் இதை மட்டும்  நம்புவது ஒருவரை கிறிஸ்தவராக மாற்றிடுமா? நீங்க என்ன செய்யப்போறீங்க? முதலில்,

இயேசு தம்மை குறித்து கூறிய அனைத்தும் உண்மை எனபது இந்த ஆதாரங்கள் நிரூபிப்பதை ஒப்புக்கொள்ளுங்கள், அதாவது, அவதான் தேவ குமாரன். இரண்டாவது, இந்த ஆதாரங்களில் இயேசு எதற்காக வந்தார் நற்ச்செய்தியின் உள்ளடக்கம் என்ன என்பதை தெளிவாக புரிந்துகொள்கிறோம். Dr. டேரல் பாக், புதிய ஏற்ப்பாடு விரிவுரையாளர் டாலாஸ் செமினறி, அதை சொல்கிறார்.

**பாக்:...**உங்களுடைய வாழ்வில் என்றன்றுமாய் இருப்பதற்காக தேவன் வகுத்திட்ட வழிதான் சுவிசேஷத்தின் நற்செய்தி என்று நான் நினைக்கிறேன். டிக்கெட்டாக அல்ல, ஒரு உறவை கேட்க்கிறார். அந்த உறவிற்கு வழிவகுக்கும் விதமாக இயேசுகிறிஸ்து ஒரு நபராக வந்து அதற்கானவைகளை நிறைவேற்றினார், நம்முடைய பாவங்களுக்காக அவர் மறித்தது மட்டுமின்றி அவருடைய ஆவியை நமக்கு அருளி உங்களுக்குள் இருக்கும் பாவ சுபாவத்தை மேற்கொண்டு தேவனோடு ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தி வெற்றியுள்ள வாழ்க்கையை வாழும்படியாக வழிவகுத்திட்டார். தேவன் அந்த ஐக்கியத்திற்கு உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதே நற்செய்தி, அந்த உறவை அதிகமாய் நேசித்தத்தால், தான் அதை நிலைப்படுத்திட தன்னுடைய சொந்த குமாரனையே பலியாக அனுப்பினார். இப்ப தேவையான ஒரே தகுதி, மிகவும் முக்கியமான தகுதி, இவை அனைத்தையும் அவர் உங்களுக்காக செய்தார் என்பதை விசுவாசிப்பது தான் ஒரே தகுதியாக கருதப்படுகிறது, விசுவாசத்தோடு, இயேசுகிறிஸ்துவின் மூலம் அந்த உறவிற்குள் வந்திட கேளுங்கள். எளிதான காரியம், இதுதான் அவசியமானது, ஏனென்றால் தேவன் உங்களுடைய வாழ்வில் வந்துவிட்டால், ஆச்சரியமான காரியங்களி செய்திட துவங்கிடுவார்,

என்றென்றைக்குமாய் தேவனோடு இருக்கும்படியான கிரியைகளை உங்களுக்குள் நடப்பித்திட ஆரம்பித்திடுவார்.

**அன்கெர்பெர்க்:** சரி, இன்றைக்கு, 2 விதமான மக்கள் கூட்டம் இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டு முழுவதுமாய் அவரையே நம்பி வாழ்கிறவர்கள் இல்லாவிட்டால் இதுவரை அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள். இன்றைக்கு நீங்கள் ஒருவேளை இயேசுவை விசுவாசித்து ஏற்றுகொள்ள விரும்பினால், உங்களுடைய வாழ்வில் அவர் இடைபட விரும்பினால், உங்களை இரட்சித்து மன்னித்து உங்களில் மாற்றத்தை உண்டாக்க விரும்பினால், அவர் அதற்கு ஆயத்தமாக இருக்கிறார். இதுதான் உங்கள் இருதய வாஞ்சையாக இருந்தால், இப்போதே உங்களை ஜெபத்தில் நடத்திட விரும்புகிறேன். என்னோடு இணைந்து ஜெபிப்பீர்களா?

ஓ, தேவனே, நான் பாவி என்பதை அறிவேன் எண்ணெய் என்னால் இரட்சிக்க முடியாது. நான் உம்மை நம்புகிறேன், கர்த்தராகிய இயேசுவே, நீர் தேவனுடைய குமாரன், நீர் சிலுவையில் மறித்து என்னுடைய பாவங்களுக்காக பலியானீர் உம்மை நம்பி உம்மிடத்தில் வருகிறவர்களை கழுவி சுத்திகரிக்கிரீர். இப்போதே ஏன் மீது நான் கொண்டிருக்கும் நம்பிக்கையை உம்மீது வைத்து உம்மை விசுவாசிக்கிறேன். என்னை மன்னித்து ஏன் வாழ்வில் வாரும். உம்மில் விசுவாசமாயிருப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும்படி நீர் மரணத்திலிருந்து உயிர்த்து மரணத்தை வென்றவராக இருக்கிறீரே உமக்கு நன்றி. இந்த நிமிடத்திலிருந்து, உம்மையே நம்புகிறேன் நீரே ஏன் இரட்சகர் என விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

இப்ப, இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், வேதம் கூறுகிறது தேவன் உங்கள் இருதயத்தை பார்க்கிறார் உங்களை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் சார்பில் உங்களை மன்னிக்கிறார் அதினால் நீங்கள் அவரோடுகூட நித்தியத்தில் இருப்பீர்கள். வேதம் சொல்கிறது, அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்."

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.